**ஆணமடுவ பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 30 ஆம் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 11 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் ஆணமடுவ பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரான நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 700,000 தொகை நிதிக்ககூற்றுக்களில் குறைவாக காட்டப்பட்டிருந்து. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகளை ஜர்னல் ஊடாக, 2020 ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |
| (ii) | 12 வேலை கடன் கொடுத்தோர் மீதிகளின் பெறுமதி ரூபா 3,723,858 ஆன தொகை கூடுதலாக காட்டப்பட்டதனால் நடைமுறை பொறுப்புக்கள் அத் தொகையால் அதிகரித்திருந்தது. | கணக்கை சரி செய்து கடன் கொடுத்தோர் பதிவேட்டை சரி செய்ய வேண்டும். | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் ஜர்னல் ஊடாக, 2020 ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |
| (iii) | 05 வேலை கடன்பட்டோர் மீதிகளில் கூட்டுத்தொகை ரூபா 694,365 யினை கூடுதலாக | கணக்குகளை சரி செய்து கடன்பட்டோர் பதிவேட்டை சரி செய்ய வேண்டும். | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட கணக்கீட்டுக் |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | | குறைபாடுகள் ஜர்னல் ஊடாக, 2020 ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |
| (iv) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 3,408,834 ஆன 05 மீதிகள் இனங்காணப்படாது தொடர்ந்தும் முன் கொண்டுவரப்பட்டிருந்து. | இனங்கண்டு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். | இம் மீதிகளை இனங்காண முடியாததனால் கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |

**(ஆ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்ககள்**

**பெற வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரான சபைக்கு கிடைக்க வேண்டிய 05 கணக்கு மீதிகளில் கூட்டுத் தொகை ரூபா 22,451,725 ஆனதுடன் அதில் 03 ஆண்டுகளை விஞ்சிய மீதிகள் ரூபா 5,004,121 ஆனது. | பெற வேண்டிய தொகையை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஜுன் மாதம் வரையும் அறவிடப்படாத மீதிகளை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக மேலும் அறிவிக்கிறேன். |
| (ii) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரான செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகளில் கூட்டுத் தொகை ரூபா 23,428,995 ஆனதுடன் அதில் 03 ஆண்டுகளை விஞ்சிய மீதிகள் ரூபா 1,129,727 ஆனது. | செலுத்த வேண்டிய மீதிகளை துரிதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஜுன் மாதம் வரையில் செலுத்த வேண்டிய எஞ்சிய தொகையை துரிதமாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |

**(இ) கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுப் பெறுமதி ரூபா 88,953,274 ஆன 03 கணக்கு விடயங்களிற்குரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இறுதி கணக்குகளுடன் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் அட்டவணைகளை சமர்ப்பிக்க | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட காணி மற்றும் கட்டிடங்கள், இயந்திரங்களும் உபகரணங்களும் |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்க வேண்டும். | மற்றும் தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் தொடர்பாக அட்டவணை தற்போது தயாரக்கப்படுவதாக தயவுடன் அறிவிக்கிறேன். |

**1.4 இணங்காமை**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமையை கணக்காய்வின் அவதானிக்கப்பட்து.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை <u>அதிகாரச்சட்டத்தின்</u> 128 ஆம் பந்தி | பிரதேச சபையினால் பயன்படுத்தப்படும் 16 ஆதனங்களில் உரிமை சபைக்கு சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | துரிதமாக உரிமையை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | முறையாக சுவீகரித்துக் கொள்ள உரிய பிரதேச செயலாளர்களுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் பிரதேச செயலகங்களினூடாக சுவீகரிப்பிற்கான முன் ஏற்பாடுகள் செய்யப்படுவதாக தாயவாய் அறிவிக்கிறேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 7,763,164 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 25,294,563 ஆனது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

பிரதேச சபையினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | வீத வரி மற்றும் வரி | 5,798 | 4,982 | 4,405 | 8,018 | 5,761 | 3,413 | 2,259 | 7,441 |
| (ii) | வாடகை | 15,546 | 13,466 | 13,199 | 2,292 | 17,698 | 9,017 | 8,831 | 2,025 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 650 | 874 | 1,153 | - | 525 | 1,278 | 1,278 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 18,500 | 30,621 | 16,086 | 22,977 | 14,755 | 15,219 | 19,440 | 8,442 |
| | கூட்டுத் தொகை | 40,494 | 49,943 | 34,843 | 33,287 | 38,739 | 28,927 | 31,808 | 17,908 |

சேர்க்கப்பட்ட வருமானத்தினுள் ஆண்டில் பில்லிடப்பட்ட வருமானத்திலிருந்து சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானத்திலிருந்து சேர்க்கப்பட்ட வருமானமும் உள்ளடங்கியுள்ளன.

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டுகளில் நிலுவை வருமானத்துடன் பெற வேண்டிய மொத்த வீதவரி மற்றும் வரி வருமானத்திளிருந்து 35 வீதமும், வாடகை வருமானத்திலிருந்து 85 வீதமும் மற்றும் ஏனைய வருமானங்களிலிருந்து 41 வீதமும் மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்டிருந்தன. | நிலுவை வருமானம் துரிதமாக அறவிடப்பட வேண்டும். | 2020 ஆண்டினுள் வருமான சேகரித்தலின் செயலாற்றலை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவாய் அறிவிக்கிறேன். |

### 2.2.3 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடந்த ஆண்டில் ரூபா 7,441,032 ஆன வீதவரி மற்றும் வரி வருமானங்களில் நிலுவை மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 8,018,637 வரை 8 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. | நிலுவை வீத வரியை துரிதமாக அறவிட வேண்டும். | 2019 ஆண்டினுள் ஆதனங்கள் தடை செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக ரூபா 1,093,869 அறவிடப்பட்டுள்ளதுடன் 2019 ஆண்டின் மொத்த சேகரிப்பை ரூபா 4,388,571 வரை வளர்த்துக் கொண்டிருப்பதாக அறிவிக்கிறேன். 2020 ஆண்டு மார்ச் மாதத்தில் ஆதனங்கள் தடை செய்யும் நிகழ்ச்சித் திட்டங்கள நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் நிலவிய கொவிட் -19 தொற்று நோய் காரணத்தால் அவற்றை மேற்கொள்ள முடியாதிருந்ததுடன் எதிர்காலத்தில் ஆதனங்கள் தடை செய்யும் நிகழ்ச்சித்திட்டங்கள் |

| | | |
|---|---|---|
| | | மேற்கொள்ளப்பட்டு நிலுவை வீத வரி அறவிடுட நடவடிக்கை எடுப்பதாக தயவாய் அறிவிக்கிறேன். |

### 2.2.4 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆண்டிற்கான நிலுவை குத்தகை வாடகை ரூபா 1,352,498 இனையும் 2013 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை காலத்திற்குரிய நிலுவை குத்தகை வாடகை ரூபா 539,174 மற்றும் 2015 ஆண்டிற்கு முன்னிருந்து நிலுவையாகவுள்ள ரூபா 28,800 ஆன கடையறை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வாடகையை துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019.12.31 திகதியில் நிலவிய நிலுவை வாடகையிலிருந்து ரூபா 55,050 மற்றும் நிலுவை கடையறை வாடகையிலிருந்து ரூபா 256,100 அறவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். எதிர்காலத்தில் இந் நிலுவை வாடகையை அறவிட நடவடிக்கை எடுப்பதாக தயவாய் அறிவிக்கிறேன். |

### 2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 திகதியன்று பெற வேண்டியதாக இருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 6,897,502 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 16,080,249 ஆனது. | மேலும் அறவிட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை நீதிமன்ற தண்டப்பணத்திலிருந்து இது வரை ரூபா 2,275,114 மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணத்திலிருந்து இது வரை ரூபா 10,584,224 அறவிடப்பட்டுள்ளதுடன் எஞ்சிய தொகையையும் துரிதமாக அறவிடுவதாக தயவாய் அறிவிக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபை அதிகார சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 2019 திசெம்பர் 31 திகதி வரை 29 விடயங்களுக்காக மாத்திரம் துணைச்சட்டம் விதிக்கப்பட்டிருந்தன. | அதிகார சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் சபைக்கு உரிய உப விதிகளை விதிக்க வேண்டும். | எதிர் காலத்தில் எஞ்சிய உப விதிகளையும் தேவைக்கு ஏற்றவாறு விதித்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக தயவாய் அறிவிக்கிறேன். |

(ஆ) **வருடாந்த அபிவிருத்தி திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 வருடாந்த அபிவிருத்தி திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூபா 800,000 ஆன 03 செயற்பாடுகளில் முன்னேற்றம் 4 சதவீதம் முதல் 14 சதவீதம் வரையான வீச்சலவில் நிலவிது. | வருடாந்த அபிவிருத்தி திட்டத்தில் குறிப்பிடப்படும் செயற்பாடுகளை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும். | 2019 ஆண்டில் சிறிய வேலைகள் மேற்கொள்ளப்பட்டதால் முன்னேற்றம் குறைந்த அளவிள் நிலவியதாக தயவாய் அறிவக்கிறேன். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளாக அதிகார பிரதேச மக்களின் சுகாதார நிலையை மேம்படுத்துதல், பொதுப் வசதிகளை வழங்குதல், இனங்கண்டிருந்த போதும் அவ் இலக்குகளை அடைவதன் முன்னேற்றம் 75 சதவீதத்திலும் குறைந்த மட்டத்தில் நிலவியது. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை பூர்த்தி செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | இதற்காக பல்வேறு அனுசரணைகள் கிடைத்ததனால் நிதி முன்னேற்றம் குறைந்த போதும், எதிர்வரும் ஆண்டினுள் உச்சத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | சபையின் இரண்டாம் நிலை பதவிகளில் 06 வெற்றிடங்களும் ஆரம்ப நிலை பதவிகளில் 12 | வெற்றிடங்களை பூர்த்தி செய்துகொள்ள | வெற்றிடங்கள் பூர்த்தி செய்து தருமாறு கோரியுள்ளதாக தயவுடன் அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| | வெற்றிடங்களும் காணப்பட்டதுடன் அமைய/பதில் பதவிகளில் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியிற்கு மேலதிகமாக 13 நபர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | நடவடிக்கை எடுக்க வேண்டும். | |
| (ஆ) | வேலைத் தடையிற்குள்ளான ஊழியர் ஒருவரின் ரூபா 2,500 கடன் மீதியொன்றும் மற்றும் ஓய்வு பெற்ற ஊழியர் ஒருவரின் ரூபா 9,441 கடன் மீதியொன்றும் 2012 ஆண்டு முதல் அறவிடப்படாது நிலவின. | அறவிட வேண்டிய ஊழியர் கடன்களை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட ஊழியர் கடன் 2012 ஆண்டு முதல் அறவிடப்படாது நிலவுவதுடன் அத் தரப்பினர்களுக்கு எழுத்து மூலம் அது பற்றி அறிவுத்துள்ள போதும் இது வரை செலுத்தியில்லாததுடன் எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் மீளாய்வாண்டில் 17 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்திருந்த ரூபா 29,664,793 ஆன ஒதுக்கீட்டிலிருந்து எவ்வித செலவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகளை பயன்படுத்தி பாதீட்டிலான வேலைகள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆண்டினுள் செலவு மேற்கொள்ள தேவை ஏற்படவில்லை ஆகையால் ஏற்பாடுகள் எஞ்சியதாக தயவாய் அறிவிக்கிறேன். |